# காமினி கொலை விசாரணை; இந்திய உதவியை நாடுமாறு கோரிக்கை!

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 15 இதழ் 270
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 01-11-1994

(கொழும்பு)

காமினி திஸாநாயக்கா படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான புலன் விசாரணையில் இந்திய அரசின் உதவியை நாடுமாறு இலங்கை அரசாங்கத்தை திருமதி காமினி திஸாநாயக்கா கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்கான கடிதம் ஒன்று பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கு திருமதி காமினி திஸநாயக்கா விஞல் அனுபப்பட்டுள்ளது.

ராஜிவ் காந்தி படுகொலை தொடர்பான விசாரணையில் முக்கிய பங்காற்றிய இந்திய மத்திய புலனுய்வு

(4ம் பக்கம் பார்க்க)

## கடற்படை தாக்கு மன்னரில் 9 மீனவர் பலி

(மன்னர்)

மன்னர் அரிப்புத்துறை கடற்பகுதியில் கடந்த 26ம் திகதி மீன்பிடித்துக்கொண்டிருந்த கடற்றெழிலாளர் மீது இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் 9 மீனவர் கொல்லப்பட்டனர்.

கொலையுண்ட 9 மீனவரில் மூவரின் உடல் இதுவரை மீட்கப்படவில்லையென்றும் அறிவிக்கப்படுகிறது.

துரையப்பு விஜயரட்ணம் (வயது 26) ஸ்ரனிஸ்லாஸ் சுகந்தன்பெர்னுண்டோ (வயது

(4-ம் பக்கம் பார்க்க)

★ இ. தொ. கா. தலைவர்

# தொண்டா பொதுசன முன்னணி அரசின் அமைச்சராக நியமனம்!

## ஜனதிபதிமாளிகையில் நேற்றுபதவிப்பிரமாணம்!

[கொழும்பு]

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், முன்னுள் அமைச்சருமான எஸ். தொண்டமான் பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சராக நியமிக்கப்பட்டார். உல்லாசப் பயணத்துறை அமைச்சராக இவர் நேற்றிரவு ஜனதிபதி டி. பி. விஜேதுங்க முன்னிலையில் ஜனதிபதி மாளிகையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனதிபதித் தேர்தலுக்கான தேர்தல் நடப்பதற்கு பத்து நாட்கள் இருக்கும்வேளையில் திரு தொண்டமான் அரசுடன் இணைந்துகொள்ளும் இந்த முக்கியமான முடிவை எடுத்துள்ளார்,

தான் எந்தக் கட்சியிலும் சேராது நடுநிலையோடு செயல்படப்போவதாக அண்மைக் காலமாகக் கூறிவந்த திரு, தொண்டமான் இப்போது அரசுடன் சேர்ந்திருக்கிருர்.

மலையகத்தோட்டத் தொழிலாளரை தேர்தலில் பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுக்கே வாக்களி

(4ம் பக்கம் பார்க்க)



### புதிய அமைச்சர் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

திரு. தர்மசிறி சேனநாயக்கா தபால் - விமானப் போக்குவரத்து அமைச்சராகவும், நிருபமா ராஜபக்ஷ - பிரதி சுற்றுலா அமைச்சராகவும், நேற்று ஜனதிபதி டி. பி. விஜேதுங்கா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர். [வி-இ]

## குண்டு வெடிப்பு ஒத்திகை வீடியோ படம் காண்பிப்பு

(புதுடில்லி)

காமினி திஸநாயக்கா உட்பட 60 பேர்வரையில் கொல்லப்பட்ட சம்பவத்தின் சூத்திரதாரியெனக்கருதப்படும் பெண் கொலையாளியும் மற்றும் வேறு சிலரும் மருதானையில் இடம் பெற்ற பேரணி ஒன்றில் ஒத்திகை பார்த்தநிகழ்ச்சி நேற்று வீடியோ படத்தில் காண்பிக்கப்பட்டதாக பி.ரி.ஐ. செய்தி தெரிவித்தது.

ஐக்கிய தேசியக் கட்சியினர் கொழும்பில் பத்திரிகையாளர்களுக்கு இவ்வீடியோபடத்தை நேற்று போட்டு காண்பித்ததாக அச்செய்தி மேலும் தெரிவித்தது. [க-இ]

## சந்திரிகாவுக்கு புதிய பிரச்னைகள்?

(கொழும்பு)

திரு. தொண்டமான் பொதுசன ஐக்கிய முன்னணி அரசுடன் நேற்று இணைந்து கொண்டதையடுத்து பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு புதுப்பிரச்னைகள் ஏற்படலாமென தெரி

(4ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச்சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## ஜனதிபதித் தேர்தல் முடியும் வரை கொழும்பில் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

ஜனதிபதித் தேர்தல் முடிவடையும்வரை கொழும்பில், பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருக்கும் என்று கொழும்பில் இராணுவப்பாதுகாப்புக்குப் பொறுப்பான மேஜர் ஜெனரல் ரொஹான் தலுவத்த தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

தென்னிலங்கையில் தோன்றக்கூடியஎந்தவொரு அசம்பாவிதங்களையும் கட்டுப்படுத்தும்

(4ம் பக்கம் பார்க்க)

## பாடசாலை விடுமுறை

(கொழும்பு)

ஜனதிபதித் தேர்தலை முன்னிட்டு எதிர்வரும் 8-ம், 9-ம், 10-ம் திகதிகள் அரசாங்க, பாடசாலை விடுமுறை தினங்களாக அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

[4ம் பக்கம் பார்க்க]

## பிரதமர் 4-ம் திகதி வவுனியா விஜயம்

(கொழும்பு)

ஜனதிபதி தேர்தல் பிரசாரத்துக்காக பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்காகுமாரதுங்கா எதிர்வரும் நான்காம் திகதி வெள்ளிக்கிழமை வவுனியா வருகிருர்.

4ம் திகதி காலை 10 மணிக்கு வவுனியா வரும் பிரதமர் அங்கு இரு பொதுக்கூட்டங்களில் உரையாற்றுவார். பிரதமருடன் பல அமைச்சர்களும் அன்று வருகின்றனர். வி.இ

★ கேகாலைப் பகுதியில்

## பொலிஸார் மீது தாக்கு பொலிஸ் அதிகாரி உயிரிழப்பு

### 4 கான்ஸ்டபிள்கள் காயம்

[கொழும்பு]

கேகாலை அங்கியமட பகுதியில் பொலிசார் மீது நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஒன்றில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டார். நான்கு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் காயமடைந்துள்ளனர்.

குற்றவாளிகள் கோஷ்டி

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஓவியர்கள் தேவை

ஓவியம் வரையக்கூடியவர்கள் தேவை சம்பளம் நேரில்கடித மூலம் தொடர்பு கொள்ளவும். 248/9 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். சி-1293

### மழைப் போர்வைகள்

மழைப் போர்வைகள் (Raincoats), மழைத் தொப்பிகள், ஜேர்க்கின் என்பன விரும்பிய நிறங்களில், வடிவங்களில் பெற்றுக் கொள்ளலாம். அளவிற்கேற்ப தைத்தும் கொடுக்கப்படும், ராம்சன்ஸ், சுதுமலை வடக்கு, மானிப்பாய். (சுதுமலை தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகில்) (சி-1288)

### வியாழ மாற்றம் வெளிவந்துவிட்டது

வியாழ மாற்றம் ரூ. 10,- இன்று முதல் எங்கும் விற்பனையாகின்றது. வியாழ மாற்றத்துடன் நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலவும். சத்யா, கட்டுடை. (சி-1291)


### பாடசாலை அனுமதி

[கொழும்புத்துறை]

யாழ். ஐந்து சந்திப் பகுதியில் இயங்கி வரும் வேலணை மேற்கு நடராசா வித்தியாலயத்தில் மாணவர்கள் புதிதாக சேர்த்துக் கொவதற்கு வித்தியாலய நிர்வாகத்தினருடன் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. -154

### 50 லட்சம் பனைவிதை நடுகை

(அரியாலை)

யாழ். மாவட்டத்திலும் ஏனைய தமிழ் மாவட்டங்களிலும் தற்பொழுது பனம் விதைகள் நடுகை பண்ணப்பட்டு வருகின்றது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத் திட்டம் அடுத்த 5 வருட காலத்தில் 50 லட்சம் பனை விதைகள் நாட்டப்படவுள்ளதாகதெரியவருகின்றது. (59)

### ஆசிரியர்களுக்கான புவியியற்கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் விஞ்ஞானக் கழகத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட க. பொ. த உயர்தர வகுப்பில் புவியியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு யாழ். பல்கலைக்கழகப் புவியியற்துறையில் எதிர்வரும் 5ம், 6ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதுவரை விண்ணப்பிக்காத பாடசாலைகளில் அதிபர்கள் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் சமூகப்பிரிவின் செயலாளருடன் தொடர்பு கொண்டு கருத்தரங்கில் பங்குபற்றுவதை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (சி)

### யாழ். வந்தனர்

(ஆனைப்பந்தி)

கடந்த 3 வருடங்களாக தீவகத்தில் ராணுவத்தின் பிடியில் சிக்கியிருந்த வயோதிபர்கள் நால்வர் அண்மையில் யாழ். வந்துசேர்ந்துள்ளனர். ஊர்காவற்றுறை நாரந்தனைப் பகுதியைச் சேர்ந்த சுவாம் பிலிப் (வயது 84) ஜக்கோ நட்சேத்திரம் (வயது 90) ஆகியோருடன் பெண்களான பிரகாசம் ஆரோக்கியம் (88 வயது) செபஸ்ரிமதலேனா (85வயது) ஆகியோர் யாழ். வந்து சேர்ந்துள்ளோர் ஆவர். காடு போன்று காட்சியளிக்கும் தீவகத்தில் வெளியுலகத் தொடர்பேதும் இன்றி தனிமையான அவல வாழ்க்கை வாழ்ந்ததாகவும் அவர்கள் கூறினர். 101

# மக்களின் வாழ்க்கை முறை இங்கு சிறப்பாக உள்ளது

— இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

எமது மக்களின் வாழ்க்கை முறை இன்றைய நெருக்கடி மிக்க கால கட்டத்திலும் கூட சிறப்பாக அமைந்துள்ளது. இவர்களின் சிறந்த தொழில் நுட்பங்கள், சிறப்பான வாழ்க்கைமுறைகள், உற்பத்திகள் உலகநாடுகள் வியக்கத்தக்க வகையில் வளர்ச்சி பெற்றுள்ளது.

பேராயர்குலேந்திரன் ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் பனை, தென்னைவள கூட்டுறவுச்சங்கங்களும் பனை அபிவிருத்திசபையும்இணைந்து நடத்தப்பட்ட அனைத்துலக விவசாயிகள் தினவிழாவில் பிரதமவிருந்தினராகக்கலந்து கொண்டு யாழ். மாவட்ட அரசில்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி உரையாற்றுகையில் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் உபதலைவர் திரு. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு.இளம்பரிதி தொடர்ந்து உரையாற்றுகையில் இன்றைய எமது சமூகதாயம் நல்ல விவேகமுள்ள நாகரீகமுள்ளவர்களாகவாழவேண்டும் என்று விரும்புகிறது இந்த வகையான முயற்சிகளில் நாம் வெற்றியும் கண்டுள்ளோம்.

விவசாயிகள் தினமானது விவசாயத்தில் ஈடுபடுபவர்களை மட்டும் சார்ந்ததல்ல, இதுபோன்ற உற்பத்தித் தொழில்களில்ஈடுபடும் யாபேரும் இவ்விழாவைக்கொண்டாடவேண்டும். இந்தவிழா தொழிலாளர்களின்முன்னேற்றத்தை மையமாகக் கொண்டு எடுக்கப்படும் விழாவாக அமைகிறது, இந்த நிகழ்ச்சியானது ஒரு சமூக. பொருளாதார முன்னேற்றத்தின் ஆய்வு என்றேகருதவேண்டியுள்ளது.

இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் எமது மக்கள் சகல தொழில்நுட்பங்களையும் அறிந்திருக்கவேண்டியுள்ளது. எமது தொழில்நுட்பங்களை மற்றவர்களும் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் பரவலாக்கப்பட வேண்டும். இவைகள் நூல்வடிவில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட வேண்டும் இன்றைய போர்க்கால சூழ்நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் சமாசங்கள் இணைந்து நல்ல செயல்திட்டங்களை வகுத்து வேலைத்திட்டங்கள் இலகுவாக்கப்பட்டு. நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

பொறுப்பும், பலமும் மதிப்பிடமுடியாதவை. இது பூரணமாக அமையவேண்டுமானால் உங்கள் தொழில்பாடுகளை மேலும் விரிவுபடுத்தவேண்டும். நாம்இன்று ஒரு சுதந்திர போராட்டத்தை நடத்தி வருகிறோம் இப்போராட்டத்தில் உங்களின் பங்களிப்பு மிகமுக்கியமானது. வெகுவிரைவில் எமக்கு நல்லதொரு விடிவு கிட்டும் என்றும் தெரிவித்தார். 162-சி

# காமினியின் கூட்டத்தில் பங்குபற்றிய தம்பதியர் தேடப்படுகின்றனர்

(கொழும்பு)

காமினி திசநாயக்காவின் ஒவ்வொரு கூட்டங்களிலும் கலந்துகொண்டதாகக் கூறப்படும் தம்பதியரை தேடிப் பொலிசார் வலைவிரித்துள்ளனராம்.

இத்தம்பதியர் காமினியின் ஒவ்வொரு கூட்டங்களுக்கும் சென்று வந்ததாக தகவல்கள் தெரிவிப்பதாக பொலிசார் கூறியுள்ளனர். ஒவ்வொரு கூட்டங்களிலும் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இதைகாட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களைக் கண்டுபிடிக்கும் பட்சத்தில் மேலதிக தகவல்கள் பெறமுடியும் எனவும் இவர்களது புகைப்படங்கள் பெருப்பிக்கப்பட்டு ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதுடன் இது குறித்து தகவல்களைப் பெறுமாறும் பொலிசார் பணிக்கப்பட்டுள்ளனராம்.

இதைவிட வேறு கோணங்களிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது, (சி)

# தேசியப் பட்டியல் மூலம் ஹேமாவை எம். பி. யாக்க மறுப்பு

(கொழும்பு)

கொழும்பு கிராண்ட்பாஸில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் மரணமான தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களான காமினி விஜேசேரா, ஜி. எம். பிரேமச்சந்திரா ஆகியவர்களின் வெற்றிடங்களில் ஒன்றை திருமதி ஹேமா பிரேமதாசாவுக்கு வழங்குமாறு காமினிதிசநாயக்காவின் மனைவியான சிறிமா திசநாயக்க விடுத்த வேண்டுகோளை, ஐக்கிய தெசியக்கட்சி ஏற்றுக் கொண்டுள்ளதாக வெளிவந்த செய்திகளை ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் மறுத்துள்ளார் என்று 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

தனது பெயரை பிரசுரிக்காது இதை ஐக்கிய தேசயக் கட்சி அதிகாரி தெவித்ததாக பத்திரிகைகளில் பிரசுரிக்குமாறு காமினி அத்துக்கோறள பத்திரிகைக்கு அறிவித்துள்ளார். என்று 'யுக்திய' மேலும் தெரிவித்துள்ளது.

அந்த இடங்களுக்கு தகம் விமலசேன, திலக் மாரப்பன ஆகியோர் நியமிக்கப்படலாம் என்று செய்திகள்தெரிவிக்கின்றன. ம-சி

# இனவாத சக்திகளுடன் ஐ. தே. க. இணைகிறது

(கொழும்பு)

காமினி திசநாயககாகொலையுண்ட பின்பு ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி தேர்தலில் இனவாதத்தை முன்வைத்து பிரசாரத்தை மேற்கொள்ள இருக்கின்றது என்று 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக உடனடி நலன்கள் பெறும்முகமாக ஐக்கிய தேசியக் கட்சி இனவாத அமைப்புளோடுஒன்றுசேர்ந்து பிரசாரத்தை மேற்கொள்ள இருக்கிறதாம்,

பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடந்த சமாதான பேச்சுவார்த்தையை எதிர்த்து பல சுவரொட்டிகள் அச்சிட இருப்பதாகவும் 'யுக்திய' பத்திரிகை மேலும் தெரிவித்தது. (ம-சி)


## தேவை

நிறுவனமொான்றின் பாதுகாப்பை திறம்பட நடாத்தி மேற்பார்வை செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ கட்டுப்பாடு, ஒழுக்கம், செயற்பாட்டுதிறன் ஆளுமை உள்ள நிறுவனங்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதி: 10 – 11 – 94

விளம்பர இல, 4464,
மே/பா ஈழநாடு லிமிட்,
த, பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

(ஏ-4464)


### யாரை ஆதரிப்பது? ஜே.ஆரின்குடும்பத்திலும் பிளவு

(கொழும்பு)

ஐ. தே. க ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் சம்பந்தமாக முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் .ஜெயவர்த்தனாவின் குடும்பத்துக்குள்ளேயே பிளவுகள் ஏற்பட்டுள்ளனவென்று ராவய பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஜே. ஆரும், மகன் ரவியும் ரணிலுடைய பக்கமும், ரவியின் மகன் சிறிமா திசநாயக்காவின் பக்கமும் ஆதரவு தெரிவித்துள்ளதாக ராவய பத்திரிகை தெரிவித்துள்ளது. (ம-சி)

### உதவிப் பணம் திருப்பி அனுப்பப்படுகிறது

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச்சேர்ந்த வறுமைக்கோட்டிற்கு கீழுள்ளவர்களுக்கென அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்டுவருகின்ற மாதாந்த உதவிப்பணத்தை உரியகாலத்தில் பெற்றுக் கொள்ளாமல் விடுவதினால் அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய பெருந்தொகையான பணம் திருப்பி அனுப்பப்படுவதாகவும் அறியப்படுகின்றது.

எனவே இப்பணத்தைப் பெற்றுக்கொள்வோர்கள் தங்களுக்குரிய பணத்தை உரிய காலத்தில் தங்களுக்குரிய அஞ்சலகங்களில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். 75-சி

### கரவெட்டி பகுதியில் திருட்டு முயற்சி முறியடிப்பு

(கொழும்புத்துறை)

கரவெட்டிப்பகுதியில் நள்இரவு வேளையில் மேற்கொள்ளப்பட்ட திருட்டு முயற்சி வீட்டுக்காரர்களின் துணிச்சலினால் முறியடிக்கப்பட்டது.

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த சி. துரைராசா என்பவர் வீட்டில் கடந்த செவ்வாக்கிழமை நள்ளிரவு காரின் 'டிக்கியைத்திறந்து அதனுள் இருந்த இருபதினாயிரம் ரூபா பெறுமதியான பற்றியைத் திருடுவதற்காக பற்றி வயர்களைக் கழற்றிக்கொண்டு நின்றவர்களை வீட்டுக்காரர்கள் கண்டு உடனே பலத்த குரலில் குழறியபோது அலயவர்கள் வந்ததைக்கண்டதும் திருடர்கள் ஓடிமறைந்து விட்டனர்,

திருடர்கள் தம்முடன் எடுத்துச்சென்ற 500 ரூபா பெறுமதியான ஒரு 'ரின்னர்' கலனையும் பயந்து அயலவர் வீட்டுக் காணுக்குள் போட்டுவிட்டுச் சென்றுள்ளார்களாம். 144-சி

# தீவகத்தில் கைதான இருவரை காணவில்லை

(ஆனைப்பந்தி)

தீவகத்தில் இராணுவ ஆக்கிரமிப்பு ஏற்பட்டபோது கைதாகிய இருவரைப்பற்றி இதுவரை எந்தத் தகவலும் இல்லையென தெரிவிக்கப்படுகின்றது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது; நாரந்தனைப் பகுதியைச் சேர்ந்த செபஸ்ரி பிரான்சிஸ் (வயது-52) என்பவரும், ஜோசப் ஜொபேட் என்ற பத்து வயதுச் சிறுவனும் இராணுவத்தினரால் கோழி பிடித்துத் தருமாறு பணிக்கப்பட்டதாகவும் இதற்கெனத் தினமும் இவ்விருவரையும் வீட்டிலிருந்து இராணுவம் அழைத்துச்செல்வதாகவும் இறுதியாக ஒரு நாள் அழைத்துச் செல்லப்பட்ட இருவரும் பின்னர் வீடு திரும்பவில்லையென்றும் இருவருக்கும் என்ன நேர்ந்தது என்பதை அறியமுடியவில்லை என்றும் குடும்பத்தினர் கூறியுள்ளனர்.

தீவகத்தில் இராணுவத்தின் பிடியில் சிக்கியிருந்து கடந்த வருடம் யாழ்ப்பாணம் வந்த பிரஸ்தாப சிறுவனின் தாயார் காணமல் போயுள்ள இருவரினதும் நிலை பற்றி அறிந்து தகவல் தருமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (101-சி)

### சென்னையில் 25 பேர் பலி

(சென்னை)

சென்னையில் நேற்று சூறுவழி தாக்கியதில் 25 பேர் மரணமடைந்துள்ளதாகவும்போக்குவரவு சேவைகள் உட்பட மக்களின் அத்தியாவசிய சேவைகள் பாதிப்படைந்ததாகவும் பி. ரி. ஐ. செய்திகள் நேற்று தெரிவித்தன. [க-இ]

### மணிவாக்கு

சூழ்ச்சியால் பதவி பெற்றவன் அதைக் கண்ணீரோடு ஒருநாள் இழக்கவேண்டியிருக்கும். ஆட்சியைத்தவருக அடைந்தவன் வீழ்ச்சிக்கும் தயாராக இருக்கவேண்டும்.

கண்ணதாசன்

## நமது நோக்கு

### புதிய அலை

காமினி திசநாயக்காவின் மறைவைப் பயன்படுத்தி அனுதாபஅலையை வீசவைத்து வாக்குத் திரட்டும் கபட நோக்கம் தெற்கிலே தெரிகிறது.

இலங்கை அரசியலிலே இது ஏதோ புதிதான சம்பவம் அல்ல.

அயல்நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற பல நாடுகளிலும் இத்தகைய அலைகளால் அரசியல்நிதானம் கெடுவதும் மக்கள் பின்னர்ஆளஅமரஇருந்து சிந்தித்து விட்ட தவறை நினைந்து வருவதுவதும் வரலாறறிற் பதியப்பட்டுள்ளன.

ஆனால் இந்த அனுதாப அலை வீச்சோடு சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் அலையும் மீண்டும் புதிய அலையாக வீசத் தொடங்கி உள்ளதும் ஆறுதல் தரும் செய்தியாகும்.

காமினி திஸநாயக்காவிற்கு இரங்கல் உரை நிகழ்த்திய பல சமயத் தலைவர்களும் அதே மேடையை இந்த அலை வீச்சிற்கு பயன்படுத்தியது கவனிக்கத்தக்கது.

துர்ரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் நிகழ்வதைத் தடுப்பதற்காக அரசாங்கமும். மக்களும் சமயப்பிரமுகர்களும் சமாதானத் திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும் என அமரபுர மகாநாயக்கர் வலியுறுத்தியுள்ளார்.

துர்ரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் ஏன் ஏற்படுகின்றன? அதற்கான அடிப்படைக் காரணங்கள் எவை?

இவை ஆராயப்படும்போது கடந்த காலத்தில் தமிழ் மக்கள் மீது அடுத்தடுத்து அவிழ்த்துவிடப்பட்ட வன்செயல்களும் இனக்குரோத நடவடிக்கைகளும் பட்டியலிடப்பட்டால் தீர்வுக்கான வழி நிச்சயம் இலகுவாக்கப்படும்.

இதேவேளை கொழும்பில் அமைக்கப்பட்ட சமாதான செயலணிக்குழு போரினல் ஏற்பட்ட பொருளாதார அழிவுகள் பற்றிய கணிப்பீட்டை வெளிப்படுத்தியுள்ளது.

மதத் தலைவர்களும் சமாதான விரும்பிகளும் தமது பிரசாரத்தைத் தீவிரப்படுத்தினல் சிறிமா திசநாயக்கவின் அனுதாப அலையிற் கலந்து வீசும் இனக்குரோத அலை சற்றுத் தணிந்து விடும்.

வழக்கமாக இனக்குரோத அலைவீசும்போது அதற்குத் தூபமிடும் சில மதத்தலைவர்கள் இன்று புதிய சிந்தனையோடு செயற்பட்டுப் புதிய அலை வீச வைக்க முயற்சிப்பது வரவேற்கத்தக்கதே.

# இனவாத உணர்வுகளைத் தூண்ட சில தீய சக்திகள் முயல்கின்றன

## அமைச்சர் சேனநாயக்கா குற்றச்சாட்டு

(கொழும்பு)

காமினி திஸநாயக்காவின் படுகொலையை சாட்டாக வைத்து இனவாத உணர்வுகளை தூண்டிவிட சில தீய சக்திகள் முயற்சி செய்கின்றன என்று அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள சுதந்திரக் கட்சி தலைமையலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில்: காமினி திஸநாயக்காவுக்கு இறுதி மரியாதை செலுத்தச் சென்ற அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இம்சைப்படுத்தப்பட்டனர். வெகுஜன 'தொடர்புத்துறையினர் தாக்கப்பட்டனர். மரணச்சடங்கின்போது இனவாதத்தை தூண்டிவிடும் பேச்சுக்கள் நிகழ்த்தப்பட்டன. ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களையும் பொய்யான் தகவல்களையும் உள்ளடக்கிய பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. அவற்றை யார் எங்கு வெளியிட்டார் என்பது பற்றி துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்படவில்லை. இது தேர்தல் பிரமாணங்களுக்கு மாறுன ஒரு செயலாகும்,

ஜனுதிபதி வேட்பாளர்களில் ஒருவர் பொ. ச. மு, விற்கு அளிக்கப்படும் வாக்கு புலிகளுக்கு அளிக்கப்படும் வாக்காகும் எனக் கூறியுள்ளார். இது இன ஒற்றுமையை சீர்குலைக்கும் நோக்காகக் கொண்ட செயலாகும்.

மக்கள் மதிநுட்பமாக நடந்து வருகிறுர்கள், இன உணர்வுகளை தூண்டிவிடும் முயற்சிகளுக்கு அவர்கள் இடமளிக்க மாட்டார்கள் என அரசு நம்புகிறது. நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட பொலிசாரும் பாதுகாப்புப் படையினரும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவிக்கின்றேம்.

திரு. காமினி திஸநாயக்காவின் படுகொலையை அரசு வன்மையாகக் கண்டிக்கிறது. வருங்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறுவதை தடுக்க அரசு தன்னுல் இயன்ற முயற்சிகளை எடுக்குமெனவும் அவர் தெரிவித்தார். -சி

## பலதும் பத்தும்

### தீபாவளி

தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் கண்ணன் நரகாசுரனை வதைத்த தினமாகத்தான் தீபாவளி கருதப்படுகிறது.

குஜராத்திலோ - புதிய நம்பிக்கையும், செழிப்பும் தரும் நாளாகக் கருதப்பட்டு மகாலட்சுமிக்கு விசேட பூசை நடத்துவார்கள், தமது வியாபார நிலையங்களை தீபங்களால் அலங்கரிப்பார்கள்.

வங்காளத்தில் காளிக்குத்தான் அன்றைய தினம் விசேட பூசை, மகாராஷ்டிரத்தில் மாபலிச் சக்கரவர்த்தி பெற்ற வரத்தினுல் அன்றைய தினத்தில் தான் உலகிற்கு வந்து தீபங்களை தரிசிக்க வாய்ப்புண்டாம்!

ஜைனர்களோ தமது சமய நிறுவனர் நிர்வாணம் பெற்ற தினமாகக் கருதுகிறுர்கள். சீக்கியரோ தமது ஆருவது குருவான ஹரி கோவிந்த சிங் சிறையிலிருந்து மீண்ட தினமாக கருதுகிறுர்களாம்!

—மயூரன்

## இராசி பலன்

01 - 11 - 1994
செவ்வாய்க்கிழமை
(தமிழுக்கு ஐப்பசி- 15)

திரயோதசி நண்பகல் 12-20 வரை, அத்தம மாலை 4-10 வரை: சித்தயோகம் இராகு காலம் மாலை 3-03 முதல் 4-31 வரை. சுபநேரம் காலை 10-33 முதல் 12-03 வரை பிரதோச விரதம்.

மேடம்: அறிஞர் பாராட்டு குடும்ப உறவு, தெய்வ நம்பிக்கை

இடபம்: பழைய கவலைகள் மந்த புத்தி, தொழில் பகை,

மிதுனம்: சகோதர மனஸ்தாபம், வீண் பீதி, அலைச்சல்.

கடகம்: புத்திர பாசம், பணவரவு, சுபகாரியநிறைவு.

சிங்கம்: கைப்பொருள் இழப்பு, துறவு நிலை, காரியத் தடை

கன்னி: முதன்மை நிலை விருந்தோம்பல், தியாகம்

துலாம்: குழப்பநிலை, மனைவி துயர், அவமதிப்பு

விருச்சிகம்: இனியசந்திப்பு, மனநிறைவு, நற்செயல்

தனுசு: தொழில் சிறப்பு, வாக்குவன்மை, கலைஞானம்

மகரம்: முட்டி மோதுதல், நண்பர் பகை, வெளியார் தொல்லை

கும்பம், முயற்சித் தடை, வீண் விரயம், உடல் உபாதை

மீனம்: பதறிப்போதல், தாமத வெற்றி, பிடிவாதம்

—ஜோஸ்யர்

காமினியின் இறுதிச் சடங்கை

## ரூபவாஹினியில் ஒளிபரப்புவது தேர்தல் சட்டத்திற்கு முரணனது

(கொழும்பு)

காமினியின் இறுதிக்கிரியைகளை ரூபவாஹினிமூலம் நேரடி ஒளிபரப்பு செய்திருந்தால் அது தேர்தல் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறும் செயலாக இருந்திருக்குமென அமைச்சர் ஜி. எல். பீரிஸ் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

திருமதி சிறிமா திஸநாயக்கா தற்சமயம் ஐ. தே. க. வின் ஜனுதிபதி வேட்பாளராக உள்ளார். மரணச்சடங்கின் போது அவர் நிகழ்த்தும் உரையை அரசியல் தொடர்புடையதாக கருதஇடமுண்டு. இதன்மூலம் சிறிமா திஸநாயக்கா அனுகூலம் தேடிக் கொள்ள முயல்வதாக மற்றைய வேட்பாளர்கள் கூறலாம். எனவே சட்டத்தின் கண்ணேட்டத்தில் பார்க்கும் போது இத்தகைய மரணச் சடங்கு தொடர்பான நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் அஞ்சல் செய்வது நியாயமற்றதாகும் எனவும் திரு. பீரிஸ் கூறினர்.

ரூபவாஹினி ஊழியர்க்கு பாதுகாப்பு இன்மையே காமினியின் இறுதிச்சடங்கை ஒளிபரப்பாமைக்குக் காரணமென முதலில் கூறிய அரசு தற்போது இவ்வாறு கூறுவதும் குறிப்பிடத்தக்கது. -சி

## ஐ. தே. க. மீதான குற்றச்சாட்டிற்கு டி.பி.யே பதிலளிக்கவேண்டும்

(கொழும்பு)

முன்னுள் ஐ. தே. க. அரசு மீது, பொ. ச. மு. வினர் சுமத்திவரும் குற்றச்சாட்டுகள் மற்றும் அவதூறுகள் குறித்து ஐ. தே. க. தலைவரும் சர்வ அதிகாரம் கொண்ட ஜனுதிபதியுமான விஜதுயங்க மௌனம் சாதித்து வருவதற்கு கட்சி உறுப்பினர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தற்போது ஐ. தே. க.வின் முன்னைய ஆட்சி குறித்து தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கும் விமர்சனங்களுக்கும் பதில் சொல்லவேண்டியஜனுதிபதி விஜயதுங்க வாய்மூடி மௌனித்திருப்பதாக ஐ.தே. க. எம். பிக்கள் சிலர் கட்சிக் கூட்டத்தில் வன்மையான கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய ஆட்சியாளர்கள் ஜனுதிபதி விஜயதுங்கமீது எதுவித குற்றமும் சுமத்தாது முன்னையதலைவர்கள் மீதும் காமினி மீதும் குற்றம் சுமத்துவது ஜனுதிபதிதேர்தலை நோக்காகவே கொண்டுள்ளதாகவும்இவற்றுக்கெல்லாம் ஜனுதிபதி விஜயதுங்காவே பதிலளிக்க வேண்டுமெனவும் கொழும்பு மாவட்ட எம். பி, ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார். -சி

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994—11—01 செவ்வாய் இரவு

8-01 ஊர்சுற்றும் ஒலிவாங்கி
8-10 அறிந்துகொள்ளுங்கள் தகவற் களஞ்சியம்
8.20 நலந்தாஞ மாரி காலத்தில் ஏற்டும் விபத்துக்களும் அவற்றைத் தவிர்ப்பதற்கான ஆலோசனைகளையும் வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் வழங்குவார்.
8-30 செய்திகள்
8-40 கருத்துக்களம் இ. இராஜேஸ்வரி எழுதிய ''கவலையீனம்''
8-50 களமும் கானமும் அச்சுநகர் பானுஷாந்தன் எழுதிய ''எங்களின் கடல்''

1994—11-02 புதன் காலை

7-02 மாவீர வணக்கம்
7-15 நீங்கள் கேட்டவை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகை செய்திகள்
7-40 நீங்கள் கேட்டவையில் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

நஞ்சு கலந்து

## ஆட்டுக் கறி உண்ட 4 சிறுவர்கள் மரணம்

(மணிலா)

மிளகுத்தூள் என நினைத்து பூச்சிகொல்லி மருந்தை கலந்து சமைத்து ஆட்டுஇறைச்சிக்கறியை உண்ட 4 சிறுவர்கள் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமாகினர், 10 பேர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்சில் தேவாலய பூசை வழிபாட்டில் கலந்து கொண்ட பின்னர் விருந்து ஒன்றில் கலந்து உணவு உண்ட வேளையிலேயே இப்பரிதாப சம்பவம் இடம்பெற்றதாம்.

மிளகுத்தூளும் பூச்சி கொல்லி மருந்தும் அருகருகில் வைக்கப்பட்டிருந்ததாகவும் இதனை தவறுதலாக மாறி எடுத்து கறிக்குள் தூவி சமைத்த போதே இந்த பரிதாப சம்பவம் ஏற்பட்டதாம். க-சி

## தீபாவளி வியாபாரம் களை கட்டுகிறது

(யாழ்ப்பாணம்(

தீபாவளி தினத்தை முன்னிட்டு யாழ். நகரில் பொருட்கள் கொள்வனவு செய்வதில் மக்கள் ஆர்வம்காட்டி வருகிறுர்கள்.

வீதிகளில் சன நெருக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. ஜவுளிக்கடைகளில் ஜவுளிகள் கொள்வனவு செய்வதிலும், தையல் கடைகளில் உடைகளை தைப்பித்துக்கொள்வதிலும் மக்கள் ஆர்வம்காட்டி வருகிறுர்கள்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வர்த்தக நிலையங்களில் பொருட்களை மலிவு விற்பனை செய்து வருவதால் பொது மக்கள் பல்வேறு பகுதிகளிலுமிருந்து வந்து பொருட்களை அதிகளவில் கொள்வனவு செய்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. —— 162-71-சி

### இன்று

இன்று முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை சகல கத்தோலிக்க கிறிஸ்துவ ஆலயங்களிலும் அனைத்து புனிதர்கள் திருநாளும் நாளை இரண்டாம் திகதி புதன்கிழமை அனைத்து மரித்த விசுவாசிகள் திருநாளும் அனுஷ்டிக்கப்படவுள்ளது -59

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பில்

## முன்னாள் சபாநாயகர் மயிரிழையில் உயிர் தப்பினார்

(கொழும்பு)

கிராண்ட் பாஸில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் முன்னாள் சபாநாயகர் எம். எச், முகம்மது மயிரிழையில் உயிர்தப்பியதாக 'சண்டே டைம்ஸ்' தெரிவித்துள்ளது,

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அல்ஹாஜ் முகம்மது கூட்டமேடைக்கு முன்னால் போடப்பட்டிருந்த ஆசனங்களில் முன்வரிசையில் பல மணிநேரம் இருந்துள்ளார். காமினி திஸாநாயக்கா பேசி முடியும் நள்ளிரவு வேளை நெருங்க கூட்ட மேடைக்கு அருகில் வந்த ஐ. தே. க. செயலரும் இக் குண்டு வெடிப்பில் கொல்லப் பட்டவருமான காமினி விஜய சேகரா அமர்வதற்கு அங்கு ஆசனங்கள் இருக்கவில்லை.

அவரை அழைத்த முகம்மது இந்த ஆசனத்தில் இருங்கள் நான் வீடுசெல்லப் போகிறேன் எனக் கூறி அவருக்கு தனது ஆசனத்தை கொடுத்துவிட்டு அங்கிருந்து வெளியேறியபின் குண்டு வெடித்தது. காமினி திஸாநாயக்காவுடன் காமினி விஜய சேகராவும் உயிரிழந்தார். சி-இ

## வீதி விபத்தில் வயோதிபர் பலி

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் நீர்வேலியில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் வயோதிபர் ஒருவர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தை நேரில் கண்ட அவரது மகன் அவ்விடத்திலேயே மயக்கமுற்று வீழ்ந்தார்'

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது: வளலாயில் இருந்து இடம்பெயர்ந்து நீர்வேலியில் வசித்து வந்த காளி குமாரு (வயது 75) எனும் வயோதிபரே இவ் விபத்தில் கொல்லப்பட்டவர் ஆவர்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு சமீபமாக இச்சம்பவம் இடம்பெற்றது. 166 இ

## விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துசபை ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு கோண்டாவில் சாலையில் நடைபெறும்.

உடுவில் கோட்டப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பகல் 1-00 மணிக்கு யா/இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

தெல்லிப்பளைக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்றுபகல் 1-00 மணிக்கு யா/மகாஜனக் கல்லூரியில் (மருதனமடம்) நடைபெறும்.

சண்டிலிப்பாய் கோட்டம் பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்றுபகல் 1-00 மணிக்கு யா/மானிப்பாய் இந்துக்கல்லூரில் நடைபெறும்.

பிரதேச சபைகள் வலி வடக்கு, வலிதெற்கு மேற்கு ஆகியவற்றின் ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2-00மணிக்கு யா/இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பளை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சங்கானை, மத்திய மருந்தகம் மகப்பேற்றுமனை மானிப்பாய் ஆகியவற்றின் ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2-00 மணிக்கு மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பழையில் (மானிப்பாய்) நடைபெறும்.

வங்கி ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 4-00 மணிக்கு யாழ், நாவலர் மண்டபத்தில் நடைபெறும்,

அனைவரும் தவறாது சமூகமளிக்கும்படி தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுக்கொள்கின்றனர், (சி)

### இ. தொ. கா. தலைவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

க்க அவர் கேட்டுக்கொள்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது,

அத்துடன் நாடாளுமன்றத்தில் சுயேட்சை உறுப்பினர்களாக இருக்கும் அவரின் கட்சியாளர்களின் ஆதரவும் அரசுக்குக் கிட்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜே. ஆர். ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாசா ஆகியோர் தலைமையிலான அரசாங்கங்களிலும் திரு. தொண்டமான் அமைச்சராகப் பணியாற்றியுள்ளது தெரிந்ததே.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் 25 வருடத்துக்கும் மேலான நட்புறவை அவர் கொண்டிருந்தார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் திரு. தொண்டமான் தலைமையிலான இ. தொ. கா. ஐ. தே. க. சின்னத்தின்கீழ் போட்டியிட்டதும் தெரிந்ததே. (இ)

### பொலிஸார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றே இத் தாக்குதலில் ஈடுபட்டதாகவும் இதுவரையில் எவரும் கைதுசெய்யப்படவில்லை எனவும் கேகாலை பொலிசார் தெரிவித்துள்ளனர். (க-இ)

### கடற்படை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

18) பிரான்சிஸ் பெர்ணண்டோ (வயது 25), அந்தோனி செபஸ்ரியான் பீரிஸ் (வயது 17) அலோசியஸ் பீரிஸ் சௌந்தரராஜ் (வயது 17) வர்னயூட்டின் பெர்ண்டோ (வயது 25) ஆகியோரின்சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளையில் அந்தோனி பிரான்சிஸ் பீரிஸ் (வயது 33, குரேதாஸ் பேணிபத் பீரிஸ் (வயது 35), ஜோசப் மேரியர் (வயது 34) ஆகியோரின் சடலங்கள் இதுவரையில் மீட்கப்படவில்லை யென்றும் அறிவிக்கப்படுகிறது. (க)

## பாதுகாப்பு அங்கியை அணிய மறுப்புத் தெரிவித்த காமினி

(கொழும்பு)

காமினி திஸநாயக்காவுக்கு கொலைப்பயமுறுத்தல் இருப்பதாகக் கூறி, அவரை குண்டு துளைக்காத அங்கிஅணியுமாறு அவரது பாதுகாப்பு அதிகாரிகள் கேட்டுக்கொண்டபோதும் அவர் அதனை அணிய மறுத்துவிட்டார்,

இந்த அங்கியை அணிந்திருந்தால் அத்துலத்முதலியின் உயிர் தப்பியிருக்கும் என்று காமினி கூறியபோதும் இதனை அணிய அவர் ஏனோ மறுத்துவிட்டார்.

தேர்தல் பிரசார வேளையில் பல இடங்களில் சுற்றிவரும் எனக்கு இத்தப் பாரமான அங்கியை அணிவது பெரும் சிரமம்'' என காமினி தனது பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் தெரிவித்திருந்தார்.

அன்று அவர் கொலைக்கு ஆளானபோது பல குண்டுகள் அவரின் மார்புப் பகுதியை துளைத்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (கே-இ)

### பாடசாலை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த மூன்றுதினங்களுக்குப் பதிலாக வேறு தினங்களைப் பாடசாலைதினங்களாகப்பயன்படுத்திக்கொள்ளலாமெனவும் அரசு அறிவித்தது. க-இ

### சந்திரிகாவுக்கு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விக்கப்படுகிறது.

திரு. செல்லசாமி, திரு. சந்திரசேகரன் ஆகிய இருவருமே இப்போது பொதுசன முன்னணியில் உள்ளனர். இவர்கள் இருவருக்கும் திரு. தொண்டமானுடன் நல்லுறவுகள் கிடையாது.

இதனால் இவர்கள் மூவரையும் இணைத்து பிரதமர் சந்திரிகா எவ்விதம் அரசைக் கொண்டு நடத்துவார் என இப்போது கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதேவேளையில் தொண்டா சந்திரிகா அரசுடன் இணைந்துள்ளதையடுத்து மலையக மக்களின்வாக்குகள் அனைத்துமே ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவுக்கு கிடைக்குமெனவும் தெரிவிக்கப்பட்டது. - இ

### காமினி கொலை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தலைமை இயக்குநர் டாக்டர் கார்த்திகேயன் இந்திய சட்ட மருத்துவ விஞ்ஞான பணிப்பாளர் பதயிலிருந்து ஓய்வு பெற்ற பேராசிரியர் சந்திரசேகர் ஆகிய இருவரையும் காமினி கொலை தொடர்பான விசாரணைக்கு அழைக்கலாம் என அக் கடிதத்தில் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில் காமினி திஸாநாயக்கா படுகொலை சம்பந்தமாக முழு அளவில் விசாரணை நடத்தப்படும் என்றும் இதற்கு வெளிநாட்டு உதவியை நாடவும் அரசாங்கம் தயாராகஇருப்பதாகவும்பிரதமர் சந்திரிக்கா உறுதியளித்திருப்பதும் தெரிந்ததே. (கே-க-இ)

### ஜனாதிபதி தேர்தல்

(1-ம் பககத்தொடர்ச்சி)

விதத்தில், நாட்டின் பிறபகுதிகளிலிருந்து பெருமளவு துருப்பினர் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர். இம்மேலதிக துருப்பினர் கொழும்பு நகரின் கேந்திரப் பகுதிகளிலும் சுற்றுப்புறங்களிலும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர்,

கொழும்புக்குள் வரும் அனைத்துவாகனங்களும்பலத்த சோதனைக்குள்ளாககப்பட்டு வருகின்றது. கொழும்பில் தற்போது பேணப்பட்டுவரும் பாதுகாப்பு உஷார்நிலை ஜனாதிபதித் தேர்தல் முடிவடையும் வரை தீவிரமாக்கப்படும்.

தற்போதைய பாதுகாப்பு தளர்த்தப்படும்பட்சத்தில் வன்முறை கும்பல்கள் தமது கைவரிசையைக் காட்டலாம், இதனாலேயே இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று கூறினார். [வி-இ]

## ஸ்ரீமா பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளமாட்டார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான ஸ்ரீமா திஸாநாயக்கா அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் தேர்தல் பிரசார கூட்டம் எதிலும் கலந்து கொள்ள மாட்டாரென ஐ. தே. க, அறிவித்துள்ளது.

அவரது பாதுகாப்பு குறித்து அச்சமும்; கணவரின் மரணத்தால் ஏற்பட்ட துயரமுமே இதற்கும்காரணங்களென தேர்தல் பிரசார இணைப்பாளர்களில்ஒருவரான சரத் அமுனுகம செய்தியாளர்களிடம் கொழும்பில் தெரிவித்துள்ளார்,

தொலைக்காட்சி வானொலி மற்றும் பத்திரிகைகள் மூலம் அவர் தமது செய்தியை மக்களுக்குவிடுப்பாரென்றும்திரு. அமுனுகம கூறினார். -இ

## காமினி கொலை காரணமாக ஐ.தே.க.வுக்குள் குழப்பம்

(கொழும்பு)

காமினி திஸாநாயக்கா கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு ஐ. தே. கட்சியின் உட்பூசல்கள் காரணமாக இருக்கலாம்என பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வாதெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஐ. தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டத்திலேயே பொலிஸ் மா அதிபர் இக் கருத்தை தெரிவித்தார்,

இதனையடுத்து சபையில் பெரும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டதாகவும் கூட்டத்திற்கு தலைமை தலைமை தாங்கிய டி. பி. விஜேதுங்கி பெரும் சங்கடத்துக்குள்ளாகயதாகவும், கூட்டத்தை இரண்டு மூன்று நிமிடங்கள் ஒத்தி வைக்க வேண்டிய நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டதாம்,

இதேவேளையில் ஐ. தே. கட்சிக்குள் தற்போது ஏற்பட்டிருக்கும் உட்பூசலான து 1972ம் ஆண்டு காலப் பகுதியில் முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கும்முன்னாள் ஜனாதிபதி ஜே, ஆர். ஜெயவர்த்தனவுக்கும் இடையிலான உட்பூசலைப் போன்றது எனவும் விமர்சிக்கப்படுகிறது-க இ

## அவசரகாலச் சட்டத்தை நீக்க அரசு முடிவு?

(கொழும்பு)

காமினி திஸாநாயக்காவின் படுகொலை காரணமாக அமுல்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

அடுத்த நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு பத்து தினங்களுக்குமுன் அவசரகால சட்டத்தை நீக்குவது தொடர்பாக விவாதிப்பதற்கு இன்று நாடாளுமன்றத்தைக் கூட்டவிருப்பதாக சட்டத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி. எஸ். பீரிஸ் தெரிவித்துள்ளார். [இ]

காமினி கொலைவிவகாரம்

## பொலிஸ் மா அதிபர் முடிவுஎதுவும்எடுக்கவில்லை

அமைச்சர் பீரிஸ்

(கொளும்பு)

காமினி திஸநாயக்காவின் கொலை குறித்து பொலிஸ்மா அதிபர் இதுவரையில் எந்த ஒரு முடிவுக்கும் வரவில்லை.

சட்டத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி. எல், பீரிஸ் இவ்வாறு பி. பி.சி.க்கு தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:

காமினியின் கொலைகுறித்து பலவிதமானகருத்துக்கள் அடிபடுகின்றன. ஆனால் எந்த ஒரு கருத்தையும் உறுதிசெய்வதற்காக போதியளவு சான்றுகள் இதுவரையில் கிடைக்கவில்லை.

இதுகுறித்து ஒரு முடிவு தென்படுவதற்கு நாம் சில நாட்கள் காத்திருக்கவேண்டும் சம்பவதினம் என்னவெல்லாம் நடந்தன என்பது பற்றி இப்போது தெரியவந்துள்ளது,

விசாரணை எப்போது முடிவடையும் என்று ஒரு காலக்கெடுவை நாம் கொடுக்கமுடியாது. ஆனல் துரிதவிசாரணை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது,

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இப்பொழுது அதிகபட்ச அளவு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் சந்திரிகாபண்டாரநாயக்கா குமாரதுங்க நாட்டின் சிலபகுதிகளில் பொதுக்கூட்டங்களை நடத்துவார். எனினும்இந்த பொதுக் கூட்டங்களின் எண்ணிக்கையையும் நாம் குறைத்துள்ளோம்.

மாவட்ட மட்டத்தில் அவர் கூட்டங்களில் கலந்து கொள்வார். பெருமளவு பொது மக்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களிலும் அவர் பேசுவார்.

### சமாதான பேச்சு

சமாதானப் பேச்சுக்கள் எப்போது ஆரம்பமாகும் என்று கூறுவது கடினம். விசாரணைகளைப் பொறுத்தே அது ஆரம்பமாகும்.

அமைதிப் பேச்சு ஆரம்பமாவதற்கான திகதி பற்றிஇப்போது எந்த முடிவுமே எடுக்கப்படவில்லை என்றார். -இ

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 01-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber B/16336/Bg